**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்கள்.10/2025 மற்றும் 11/2025**

IN

**அசல் வழக்கு எண்.221/2016**

1. குருசாமி கோனார் (இறப்பு)
2. முருகேஸ்வரி
3. ராமலட்சுமி
4. மாரியம்மாள்
5. பூமாரியம்மாள்
6. பேச்சியம்மாள் ....மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. உடையம்மாள்
2. வெயிலுகந்தாள்
3. காளீஸ்வரி ....எதிர்மனுதார்கள்/வாதிகள்

இம்மனுக்களானது 27.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.மாரியப்பன் அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:27:41 +0530

**<u>பொதுவான உத்தரவு</u>**

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் 151 மற்றும் கட்டளை 16 விதி 2–ன் கீழ், "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் பெ.நாராயணன் அவர்கள் குமாரர் குருசாமி" என்பவரை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ளும் வகைக்கு, 31.10.2025 அன்று பிரதிவாதிகளாகிய மனுதாரரகள் தரப்பு வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மாற்றி அசல் வழக்கை மீண்டும் மறுதிறவு செய்தும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**<u>1) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்கள்.10/2025 மற்றும் 11/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், பிரதான வழக்கை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மனுதாரர்கள் மீது பிராது தபசில் சொத்துக்கள் தங்களுக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும் அதனை தொடர்ந்து நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் இவ்வழக்கின் பிராது தபசில் சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தாயார் பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சிகளாக முத்தையாகோனார், லட்சுமணக்கோனார், ஆறுமுக ரெட்டியார் ஆகியோர்கள் கையொப்பமிட்டிருந்த நிலையில், மேற்படியார்கள் மூவருக்கும் மேற்படி உயில் ஆவணம் பற்றி சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் மூலம் சாட்சி சமன் செய்திருந்த நிலையில், மேற்படியார்கள் மூவரும் இறந்துவிட்டதாக கூறி மேற்படி சாட்சி சம்மன் திருப்பப்பட்டுவிட்டது என்றும், ஆகவே மேற்படி உயில் ஆவணத்தில் 1வது சாட்சியான முத்தையாக்கோனார் என்பவர் இறந்துவிட்ட நிலையில்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:27:48 +0530

மேற்படியார் வேல்ச்சாமி என்பவரை மேற்படி உயில் பற்றி சாட்சியம் அளிக்க சமன் செய்திருந்த நிலையில், மேற்படியாரை எதிர்மனுதாரர்கள் மிரட்டி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவிடாமல் செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் பெ.நாராயணன் அவர்கள் குமாரர் குருசாமி" என்பவரை விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு கட்சியையும், எதிர்மனுதாரர்களின் மோசடி செய்கைகளையும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபட நிரூபணம் செய்ய முடியும் என்றும், மேலும், இந்நீதிமன்றமும் இவ்வழக்கில் ஒரு இறுதியான தீர்முடிவும் காண இயலும் என்றும், ஆகையால், "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் பெ.நாராயணன் அவர்கள் குமாரர் குருசாமி" என்பவரை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ளும் வகைக்கு, 31.10.2025 அன்று பிரதிவாதிகளாகிய மனுதாரரகள் தரப்பு வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மாற்றி அசல் வழக்கை மீண்டும் மறுதிறவு செய்தும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இம்மனுக்கள் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **3ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:**–

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், இந்த தபசில் கண்ட சொத்துக்களில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் எக்காலத்திலும் கிடையாது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் ஒரு மோசடியான ஆவணம் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இவ்வழக்கை எப்படியாவது இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருவது இந்நீதிமன்றத்திற்கு நன்கு துலங்கும் என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் வாதுரை முடிந்த பிறகு பொய்யான

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:27:54 +0530

காரணங்களை கூறி இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்நீதிமன்றம் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வேண்டிய கால அவகாசம் கொடுத்த பிறகும் அதை சரிவர பின்பற்றாமல் இந்த மோசடி மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும், எதிர்மனுதாரர்கள் சாட்சிகளை மிரட்டுவதாக கூறுவது பொய்யாகும் என்றும், எனவே இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனுக்களானது, "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் பெ.நாராயணன் அவர்கள் குமாரர் குருசாமி" என்பவரை மனுதாரர்கள் தரப்பு சாட்சியாக விசாரணை செய்து கொள்ளும் வகைக்கு, 31.10.2025 அன்று பிரதிவாதிகளாகிய மனுதாரரகள் தரப்பு வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மாற்றி அசல் வழக்கை மீண்டும் மறுதிறவு செய்தும், மேற்படியாருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பிடவும் உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு வாத உரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரர்களால் இம்மனுக்களில் இவ்வழக்கின் பிராது தபசில் சொத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தாயார் பேச்சியம்மாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:28:01 +0530

என்றும், மேலும், மேற்படி உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சிகளாக முத்தையாகோனார், லட்சுமணக்கோனார், ஆறுமுக ரெட்டியார் ஆகியோர்கள் கையொப்பமிட்டிருந்த நிலையில், மேற்படியார்கள் மூவருக்கும் மேற்படி உயில் ஆவணம் பற்றி சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றம் மூலம் சாட்சி சமன் செய்திருந்த நிலையில், மேற்படியார்கள் மூவரும் இறந்துவிட்டதாக கூறி மேற்படி சாட்சி சம்மன் திருப்பப்பட்டுவிட்டது என்றும், ஆகவே மேற்படி உயில் ஆவணத்தில் 1வது சாட்சியான முத்தையாக்கோனார் என்பவர் இறந்துவிட்ட நிலையில், மேற்படியார் வேல்ச்சாமி என்பவரை மேற்படி உயில் பற்றி சாட்சியம் அளிக்க சமன் செய்திருந்த நிலையில், மேற்படியாரை எதிர்மனுதாரர்கள் மிரட்டி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவிடாமல் செய்துவிட்டார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி உயில் ஆவணத்தை எழுதிய "தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கரிவலம்வந்தநல்லூர் கிராமம், பம்புத் தெருவில் குடியிருக்கும் பெ.நாராயணன் அவர்கள் குமாரர் குருசாமி" என்பவரை விசாரணை செய்தால் மட்டுமே மனுதாரர்கள் தரப்பு கட்சியையும், எதிர்மனுதாரர்களின் மோசடி செய்கைகளையும் இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபட நிரூபணம் செய்ய முடியும் என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

8) அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு வாத உரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களால் இம்மனுக்களானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றமாக உள்ள நிலையில், மனுதாரர்கள் தங்களது வழக்கை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதி என்பதாலும், மேலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இம்மனுக்களை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) இருப்பினும், மனுதாரர்கள் இம்மனுவை விரைந்து தாக்கல் செய்யாமல், அசல் வழக்கில் வாதிகள் தரப்பு வாத உரை முடிவடைந்தபிறகு பிரதிவாதிகள் தரப்பு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் சமயத்தில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:28:07 +0530

காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். மேற்படி காலதாமதத்தால் வாதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில்கொண்டு, இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**10) இறுதியாக**

**இ.ம.எண்.10/2025**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 16.12.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.12.2025.

**இ.ம.எண்.11/2025**

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 16.12.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 16.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:28:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.10 17:28:22 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.10/2025 and
I.A.No.11/2025
in
O.S.No.221/2016

உத்தரவு (Draft / Fair)

நாள் : 10.12.2025